தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.09.2013**

## இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ சனிக்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில், சின்னக்கல்லாறு பகுதியில் 60 மி.மீ. மழை பெய்துள்ளது. வால்பாறை, நடுவட்டத்தில் 50 மி.மீ. மழையும், பெரியாறு, ஓமலூரில் 40 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இதேபோல, கூடலூர் (30 மி.மீ.), ஏற்காடு (20 மி.மீ.), குழித்துறை, தக்களை, விழுப்புரம் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

## ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் ஆந்திர பச்சை மிளகாய் விலை குறைந்தது

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் ஆந்திர மாநில பச்சை மிளகாய் விலை குறைந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தைக்கு திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, தேனி, கரூர் மற்றும் சுற்று வட்டப் பகுதிகளில் இருந்து தினந்தோறும் காய்கறிகள் விற்பனைக்காக வந்திறக்கப்படுகின்றன.

இங்கிருந்து 70 சதவீத காய்கறிகள் கேரளத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

சில தினங்களுக்கு முன், கேரளத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்ட போது, ஒரு கிலோ ஆந்திர பச்சை மிளகாய் ரூ. 30-க்கும், சின்ன வெங்காயம் ரூ.

60-க்கும், வெண்டைக்காய் ரூ. 19-க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால், வெள்ளிக்கிழமை பச்சை மிளகாய் ரூ. 16-க்கும், சின்ன வெங்காயம் ரூ. 40-க்கும், வெண்டைக்காய் ரூ. 6-க்கும் விற்கப்பட்டது.

### விவசாயிகளின் நண்பன் ஆந்தை!

கோவை அருகே சரவணம்பட்டியில் பிடிபட்ட 2 ஆந்தைகளும், தனியார் கல்லூரியில் பிடிபட்ட ஓர் ஆந்தையும் கோவை வ.உ.சி. உயிரியல் பூங்காவுக்கு புதிய வரவாக வந்துள்ளன.

இதுகுறித்து பூங்கா இயக்குநர் அசோகன் கூறியது:

சரவணம்பட்டி பகுதியில் பிடிக்கப்பட்ட இரண்டு ஆந்தைகளும் வெண்ணாந்தை வகையைச் சேர்ந்தவை. தனியார் கல்லூரியில் பிடிபட்டது மரஆந்தையாகும். மர ஆந்தை உலகிலேயே மிகவும் சிறிய வகையைச் சேர்ந்தது என்பது சிறப்பம்சம்.

அப சகுணமாகவும், அச்சத்தின் அடையாளமாகவும், மரணத்தின் குறியீடாகவும் நகர்ப்புற மக்களால் கருதப்படும் ஆந்தை, வேளாண் தொழிலின் உற்ற நண்பனாகும். உலகெங்கும் 132 ஆந்தை வகைகள் உள்ளன. நாம் வசிக்கும் இடங்களில், புள்ளி ஆந்தை, கூகை என்ற வெண்ணாந்தை, கொம்பன் ஆந்தை ஆகிய மூன்று வகைகள் உள்ளன.

வெண்ணாந்தை ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தது என்ற தவறான கருத்து உள்ளது. இது நம் நாட்டுக்கே உரித்தான அழகான பறவை. இதன் முகம் ஆப்பிள் அல்லது இதய வடிவில் இருக்கும். பழைய கோட்டைகள், பாழடைந்த வீடுகள், கிணறுகளில் இது வாழும்.

வட்ட வடிவமான வெள்ளை முகம் தட்டுப் போலவும், உடலின் முன்பகுதி வெண்மையாகவும், பின்பகுதி மஞ்சள் நிறத்தில் சிறு கறுப்புப் புள்ளிகளுடனும் காணப்படும்; கரகரப்பான குரலில் கிறீச்சிடும்.

அந்தி சாய்ந்த நேரத்தில் கூட்டை விட்டு வேட்டைக்கு புறப்படும். இரவில் இதனுடைய தோற்றம் அச்சமூட்டும் விதத்தில் இருப்பதாகக் கருதப்பட்டதால், "சாக்குருவி' என்றும் அழைக்கப்படுகிறது.

இரவு முழுவதும் தனது மென்மையான சிறகுகளால் துளி கூட சத்தமின்றிப் பறந்து திரியும். வயல்வெளிகளில் திரியும் எலி, சுண்டெலிகளை வேட்டையாடித் தூக்கிச் செல்லும்.

ஒரே இரவில் மூன்று முதல் நான்கு எலிகளை உண்ணக் கூடியது இந்த ஆந்தை. இதன் இனப்பெருக்கக் காலம் நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை. மரப் பொந்துகள், பாழடைந்த கட்டடங்களில் நான்கு முதல் ஏழு முட்டைகளை இடும்.

மூடநம்பிக்கையாலும் அச்சத்தின் காரணமாகவும் ஆந்தைகள் கொன்று அழிக்கப்படுகின்றன. வேளாண்மைக்குத் தீங்கு செய்யும் எலி, வெட்டுக்கிளி, புழு, பூச்சிகளை உணவாக்கிக் கொண்டு விவசாயிகளுக்கு உற்ற நண்பனாகத் திகழும் கூகைகளைப் பாதுகாப்பது வேளாண் தொழிலுக்கு நல்லதாகும்.

தற்போது கோவை சுற்றுப்புறப் பகுதிகளில் வயல்வெளிகள் அழிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்படுவதால் ஆந்தைகள் உணவுக்காக வெகுதூரம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செல்லும் போது தாக்குதலுக்கு உள்ளாவதால் இவை அழிந்து வருகின்றன.

## வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை: அக்.1 முதல் வெள்ளக்கட்டுப்பாட்டு அறை செயல்படும்

வடகிழக்குப் பருவமழையின்போது ஏற்படும் இன்னல்களை எதிர்கொள்ளும் வகையில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகங்களில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் வெள்ளக்கட்டுப்பாட்டு அறை வரும் அக்டோபர் 1-ஆம் தேதி முதல் செயல்படும் என்று ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசினார்.

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில், ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பேசியது: வடகிழக்குப் பருவமழையின்போது ஏற்படும் அனைத்து இன்னல்களையும், இழப்புகளையும் எதிர்கொள்ளும் விதமாக திருப்பூர் மாவட்டத்தில் அனைத்து கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் அலுவலகங்களில் 24 மணி நேரமும் செயல்படும் வெள்ளக்கட்டுப்பாட்டு அறை அக்டோபர் 1-ஆம் தேதி முதல் செயல்பட உள்ளது.

வெள்ள சேதம் குறித்த அறிக்கை சேகரம் செய்வதற்கு ஏதுவாக ஆட்சியர் அலுவலகத்தில் பிரத்யேகமாக ஒரு கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் சுழற்சி முறையில், பணியாளர்களை கொண்டு செயல்பட உள்ளது. இதற்கென இலவச தொலைபேசி எண்.1073 ஒதுக்கப்பட்டுள்ளது.

மழைவெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும்பட்சத்தில் பாதிக்கப்படும் மக்களை தங்கவைக்கவும், அவர்களுக்கு உணவு வழங்கவும் ஏதுவாக முன்னெச்சரிக்கையாக பள்ளிகள், திருமண மண்டபங்கள், சமுதாய நலக்கூடங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம், மருத்துவம், தீயணைப்பு, நெடுஞ்சாலைத் துறைகள், மின் வாரியம், அரசு போக்குவரத்துக் கழகம், நகராட்சி, மாநகராட்சி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் சார்பில் மழைவெள்ள மீட்புப்பணிகளை துரிதமாக மேற்கொள்ளத் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கஜலட்சுமி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கண்ணன், கோட்டாட்சியர்கள் பழனிக்குமார் (திருப்பூர்), திவாகர்(தாராபுரம்) மற்றும் பொதுப்பணித்துறை, காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 79.41 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 79.41 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 4,183 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன நீரும், வாய்க்காலில் 2,450 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 15.38 டி.எம்.சி.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 6,86,548 கால்நடைகளுக்கு வாய் மற்றும் கால் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணிகள் இம் மாதம் 4-வது வாரம் முதல் 21 நாள்களுக்கு நடைபெறுகிறது. இதற்கான தடுப்பூசி மருந்துகள் மாவட்டத்தில்

உள்ள கால்நடை பெரு மருத்துவமனைகளில் உள்ள குளிரூட்டும் அறையில் பாதுகாப்புடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந் நோய் காற்று மூலம் எளிதில் பரவும் தன்மை கொண்டது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்துக்கு மேற்பட்ட இளங் கன்றுகளை இம் மாதம் 4-வது வாரம் முதல் நடைபெறும் சிறப்பு தடுப்பூசி முகாம்களுக்கு அழைத்துச் சென்று பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் கிழக்குக் கரை பாசனப் பகுதிகளில் நெல் நடவுப் பணிகள் தீவிரம்

மேட்டூர் அணையின் கிழக்குக் கரை வாய்க்கால் பாசனப் பகுதிகளில் நெல் நடவுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், நெல் சாகுபடிக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மேட்டூர் அணை நிரம்பியதைத் தொடர்ந்து, கிழக்கு மற்றும் மேற்குக் கரை வாய்க்காலில் பாசனத்துக்கு கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த விவசாயிகள் நீர்த் திறப்பைத் தொடர்ந்து நெல் சாகுபடி பணிகளைத் தொடங்கினர்.

பள்ளிப்பாளையம், குமாரபாளையத்தில் 11 வருவாய்க் கிராமங்களில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் தற்போது நெல் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. குமாரபாளையம் அமானி, அக்ரஹாரம், அய்யம்பாளையம் பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஐஆர் 20, வெள்ளிப் பொன்னி, ஆந்திரப் பொன்னி எனப்படும் பிபிடி 5204 ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது நடவுப் பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து, பள்ளிப்பாளையம் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் ஆர்.அசோக் கூறியது:

கிழக்குக் கரை வாய்க்கால் பாசனத்தில் குமாரபாளையம் வட்டாரத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அதிக விளைச்சல் பெறும் வகையில்

விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க வேளாண்மைத் துறை சார்பில், திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கத் திடல்கள் 250 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய சாகுபடி முறையில் நாற்று விடப்பட்ட 20 நாள்களிலும், திருந்திய நெல் சாகுபடியில் 8 முதல் 14 நாள்களில் குறைந்த காலத்திலேயே நாற்றுகளைப் பிடுங்கி நட அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், வயல்களின் வரப்புகளில் உளுந்துப் பயிரை விதைக்கவும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

இதன்மூலம், நன்மை தரும் பூச்சிகள் பெருக்கமடைவதோடு, நெல் பயிரைத் தாக்கும் பூச்சிகள் கொல்லப்படுகின்றன. மேலும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது நடவுப் பணிகள் தீவிரமாக நடைபெறுவதால் உழவுக்குத் தேவைப்படும் உரங்களின் விற்பனை, இருப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றார் அவர்.

பி.குமாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத் தலைவர் வி.தேவராஜன் கூறியது:

சங்கத்தில் நடவுப் பணிகளுக்கு யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் மற்றும் கலப்பு உரங்கள் தேவையான அளவு உள்ளன. சங்கத்தில் நாள்தோறும் விவசாயிகள் உரங்களை வாங்கிச் செல்கின்றனர். நடவுப் பணி தீவிரமடைந்துள்ளதால் வெள்ளிக்கிழமை மட்டும் ரூ.1.50 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

குடிநீருக்கு மட்டுமே திறக்கப்பட்டு வந்த வாய்க்காலில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டதால், விவசாயிகள் நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

"பருவ மழையின் தீவிரம் குறைந்து மிதமான மழை பெய்யக்கூடும்

தென்மேற்குப் பருவ மழையின் தீவிரம் குறைந்து சில இடங்களில் மட்டும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (செப்.21 முதல் 24-ஆம் தேதி வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தின் பல இடங்களிலும் 3 மிமீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கிமீ திசைவேகத்தில் வடமேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலைக் குறைந்தபட்சம்

73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 45 சதம் முதல் அதிகபட்சம் 75 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: தென்மேற்குப் பருவ மழையின் தாக்கம் தொடர்ந்து நீடித்தாலும் அதன் தீவிரம் வடமேற்கு மண்டலத்தின் மேல் குறைந்தே காணப்படும். இதனால், சில இடங்களில் மட்டும் லேசான மழையும், அதிக காற்றின் வேகமுமான தட்ப வெப்பநிலை நிலவும். இதனால், கோழிகளுக்கு ஈரம் குறைந்த தீவன மூலப்பொருள்களைப் பயன்படுத்தி, முட்டை உற்பத்தியில் ஏற்ற இறக்கங்களைத் தவிர்க்க வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் ஈகோலை மற்றும் ஈரல் அழற்சி நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்தது. தவிர, தீவனமூலப்பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம் நோய்க்கிருமிகளும் அதிகளவில் காணப்படுகின்றன. மழைக் காலம் என்பதால் குடிநீரை ஆய்வு செய்து அதற்கேற்ப கிருமிநாசினி கலந்து பயன்படுத்துவதால், ஈகோலை நோயைக் கட்டுப்படுத்தலாம். தவிர, தீவன மூலப்பொருள்களில் பூஞ்சான நச்சு மற்றும் நோய்க்கிருமிகள் குறித்து ஆய்வு செய்து பயன்படுத்திட வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: கறவை மாடு மற்றும் ஆடு வைத்திருக்கும் விவசாயிகள் பல்லாண்டு தீவனப் பயிர்களையும், அகத்தி சூபாபுல், கிளைரிசிடியா ஆகிய மரவகை பயிர்களையும் மொத்தம் 10 சென்ட் நிலப் பரப்பில் சாகுபடி செய்வதால் ஒரு கறவை மாடு அல்லது 10 ஆடுகளுக்கு ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் அளிக்க முடியும். மழைக் காலங்களில் ஆடுகள் மேய்ச்சலுக்குச் சென்று நுனிப்புல்லை மேய்ந்து கழிச்சல் ஏற்பட்டால் சின்னசீரகம், கசகசா, வெந்தயம் - 200 கிராம், மிளகு -15 கிராம், மஞ்சள்தூள் -15 கிராம், பெருங்காயம் - 5 கிராம், வெங்காயம் -10, பூண்டுட-6, புளி-200 கிராம், கருப்பட்டி- 250 கிராம் ஆகியவற்றை அரைத்து, பின் சிறுசிறு உருண்டைகளாக்கி கல் உப்பில் தோய்த்து உள்ளே செலுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கால்நடைகளுக்கு இலவசக் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தல்

கால்நடைகளுக்கு இலவசக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என விவசாயிகள் சங்கத் தலைவர் கே.எம்.ராமக்கவுண்டர் வலியுறுத்தினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் நோய் தாக்கி உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கால்நடை மருத்துவர் சத்தியவாணி தலைமை வகித்தார். ஆவின் மேலாளர் சேகர் முன்னிலை வகித்தார்.

இதில், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் சங்க மாநில பொதுச்செயலாளர் கே.எம்.ராமகவுண்டர் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகள் வளர்ப்பு முக்கியத் தொழிலாக உள்ளது. இதில், ஆவின் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் ஒரு சில கறவை மாடுகளுக்கு மட்டும் அரசு மானியத்துடன் கூடிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நிகழாண்டில், காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி பகுதிகளில் 250-க்கும் மேற்பட்ட கால்நடைகள், கறவைப் பசுக்கள் மர்ம நோய் தாக்குதலால் இறந்துள்ளன. இவைகளில் ஒரு சில மாடுகளுக்கு மட்டும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதனால், அந்த மாடுகளுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. மற்ற கால்நடைகளுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைப்பதில்லை. எனவே, அனைத்து கால்நடைகளுக்கும் அரசு இலவச காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

மேலும், அண்டை மாநிலங்களில் வழங்கப்படுவது போல், பால் உற்பத்தி மானியமாக லிட்டருக்கு ரூ.6 மற்றும் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.10 உயர்த்தி வழங்க வேண்டும் என்றார் அவர்.

விழாவில், ஆவின் மேற்பார்வையாளர் சுந்தரேசன், இயக்குநர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சங்கச் செயலாளர் பாஸ்கர் நன்றி கூறினார்.

## தமிழகத்தில் ஒரு கோடி டன் உணவு தானிய உற்பத்தி



தமிழக அரசின் சிறப்பான நடவடிக்கைகளால் 2011-12-ஆம் ஆண்டில் மட்டும் 1.0152 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று தமிழக வேளாண் துறை அமைச்சர் எஸ். தாமோதரன் தெரிவித்தார்.

தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் "அக்ரிகல்சர் டுடே' இதழ் ஆண்டுதோறும் "வேளாண் தலைமை விருதை' வழங்கி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழக அரசு வேளாண் முன்னேற்றத்துக்கு எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்டும் வகையில் 2013-ஆம் ஆண்டுக்கான மாநில வேளாண் தலைமை விருது தமிழக அரசுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. விருது வழங்கும் நிகழ்ச்சி தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்றது. உத்தர பிரதேச ஆளுநர் பி.எல். ஜோஷி, மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆஸ்கர் ஃபெர்னாண்டஸ், மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர், பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், வேளாண் அறிவியல் வல்லுநர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோர் விருதை எஸ். தாமதோரனிடம் வழங்கினர்.

**அதைத் தொடர்ந்து தாமதோரன் பேசியது:**

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், தொழில்நுட்பங்களை அதிக அளவில் பயன்படுத்தவும் தமிழக முதல்வர் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்.

அதன் பயனாக 2011-12-ஆம் ஆண்டில் 1 கோடி டன் உணவு தானிய உற்பத்தியைத் தமிழகம் எட்டியுள்ளது.

16 ஆயிரம் கிராமங்களின் விவசாயிகளை அழைத்து திட்ட அமலாக்கம், மானியம் வழங்குதல், தொழில்நுட்பப் பயன்பாடு போன்றவற்றை தமிழக முதல்வர் சிறப்பாக அமல்படுத்தி வருவதால் வேளாண் உற்பத்தியில் தமிழகம் சிறப்பான நிலையை எட்டியுள்ளது.

தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியையும், வேளாண் மக்களுக்கு மூன்று மடங்கு வருவாய் கிடைக்கும் நோக்கத்துடனும், தமிழகத்தில் பல்வேறு திட்டங்களையும், தொழில் நுட்பங்களையும் தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். அதற்கு விருது வழங்கி கௌரவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் தாமோதரன்.

### வைகை அணையில் இருந்து 25 முதல் தண்ணீர் திறப்பு

தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையில் இருந்து வரும் 25ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தேனி மாவட்டத்திலுள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பிரதானக் கால்வாய் இருபோக பாசன நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழுள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும் தண்ணீர் திறந்து விட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன.

அவர்களின் கோரிக்கைகளை ஏற்று பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசனப் பரப்பாகிய 45 ஆயிரத்து 41 ஏக்கர் நிலங்களுக்கும், ஒருபோக பாசனப் பரப்பாகிய 85 ஆயிரத்து 563 ஏக்கர் நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழுள்ள ஒரு போக பாசனப் பகுதியான 19 ஆயிரத்து 439 ஏக்கர் நிலங்களுக்கும் பாசனத்துக்காக வரும் 25ஆம் தேதி முதல் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும்.

இதனால், மதுரை, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 43 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

## விலை பேசும் நிலங்களாக விளை நிலங்கள்

தமிழகத்தில் உள்ள விளை நிலங்கள் அனைத்தும் விலை பேசும் நிலங்களாக மாறியுள்ளன என்றார் சிதம்பரம் தொகுதி எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன்.

கடலூர் மாவட்டம், புவன

கிரியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க 9-வது மாவட்ட மாநாட்டை முன்னிட்டு பொதுக்கூட்டம் பேருந்து நிலையம் அருகே வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கே.பாலகிருஷ்ணன் எம்எல்ஏ மேலும் பேசியது:

கடந்த 15 ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ள விளை நிலங்கள் அனைத்தும் விலை நிலங்களாக மாறி வருகின்றன. இதற்கு தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேலை செய்த விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை இல்லை. நூறு நாள் வேலை இல்லையென்றால் கிராமப் புறங்களில்

பட்டினிச் சாவு அதிகரித்திருக்கும். மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் ரூ. 35 ஆயிரம் கோடி மட்டுமே ஒரு ஆண்டுக்கு மானியமாக வழங்குகிறது. இதில் தமிழகத்துக்கு வெறும் ரூ.2,800 கோடி தான். ஆனால் கார்பரேட் நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 15 லட்சத்து 560 கோடி மானியமாக வழங்குகிறது. வெளிநாட்டில் உள்ள கருப்பு பணம் 40 லட்சம் கோடியை இந்தியாவுக்கு கொண்டுவர மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கக் கூடிய பொருட்களை அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக் கொண்டுதான் வழங்குகின்றனர். இதனால், அரசுக்கு மக்களிடத்தில் கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. இனிமேல் அரசு விவசாயிகளுக்கு மானியம், இலவசம் அறிவிக்காமல், அவர்களின் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில் மாநிலப் பொதுச் செயலாளர் மணி, அகில இந்திய துணைத் தலைவர் திருநாவுகரசு, மாவட்ட துணைத் தலைவர் துரைராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பறக்கையில் செப். 24 கறவை மாடு வளர்ப்பு இலவச பயிற்சி

நாகர்கோவில், பறக்கை கால்நடை மருத்துவ பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் செப்டம்பர் 24 ஆம் தேதி கறவை மாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி நடைபெறுகிறது.

இதுகுறித்து இம்மையத்தின் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் கே. கனகராஜதுரை வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பறக்கையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் **ஆராய்ச்சி மையத்தில் கறவை மாடு வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவச பயிற்சி செப்டம்பர் 24 ஆம் தேதி நடைபெறவுள்ளது**.

பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள பண்ணையாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் பெயர்களை தொலைபேசி 04652-286843 அல்லது நேரடியாக வந்து இம்மையத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார் அவர்.

## மழை நீரை சேமிக்க துரித நடவடிக்கை தேவை

மழைநீரை சேமிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்கோட்டையில் வெள்ளிக்கிழமை நடந்த குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர்.

புதுக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகள் பேசியது:

அறந்தாங்கி செல்லத்துரை: விவசாயிகள் விளைவித்த தானியங்களின் ஈட்டுக்கடனுக்கு 14 சதம் வட்டி விதிக்கப்படுகிறது. ஆனால், தங்கத்தை அடகு வைக்கும்போது அதற்கான வட்டி 4 சதம் தான். அதனால் தான், பொதுமக்களும், விவசாயிகளும் தங்கத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதைத்தவிர பாதுகாப்பான வழி வேறு எதுவும் இல்லை. இந்தச் சூழ்நிலையில் தங்கம் வாங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டுமென மத்திய நிதிஅமைச்சர் ப. சிதம்பரம் கூறுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். இவரது கருத்தை விவசாயிகள் பலரும் ஆமோதித்தனர்.

புதுகை ஜிஎஸ். தனபதி: கடந்த ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டது. அதில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இதுவரை இழப்பீடு கிடைக்கவில்லை.

அது கிடைக்குமா, கிடைக்காதா என விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். அக்டோபர் மாதம் வடகிழக்குப் பருவமழை தொடங்குமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனால் கிடைக்கும் மழைநீரை முறையாகச் சேமிக்க வேண்டியது அவசியம். அதற்காக மாவட்டத்தில் ஓடும் 4 காட்டாறுகளிலும் தடுப்பணைகளை கட்ட வேண்டும். இதற்கான ஆய்வு எந்த நிலையில் உள்ளது.

முத்துக்காடு சி. அப்பாவுபாலாண்டார்:

தமிழகத்தில் வட மற்றும் தென் மாவட்டங்களில் கடுமையான மழை பெய்துள்ளது. ஆனால், ஏரிகள் நிறைந்த புதுக்கோட்டை மாவட்டத்துக்கு போதுமான மழை கிடைக்கவில்லை. சொற்ப மழையல் நீர் நிலைகளில் 10 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் இருக்கும். எனவே, மழைநீரை சேமிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவரங்குளம் தினகரசாமி: நெல் சேமிப்புத்திட்டத்தில் ரூ. 300 மானியத்தில் பிளாஸ்டிக் கலன் வழங்கப்பட்டது. அத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும். மேலும், உழவுக்கு அதிக எண்ணிக்கையிலான மினி டிராக்டர்களை வேளாண் பொறியியல் துறையினர் வாடகைக்கு வழங்க வேண்டும்.

கூவாப்பட்டி முருகேசன்: பசுந்தாள் உரமான தக்கைப்பூண்டு விதைக்கு நீடித்து வரும் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் விதைப்பண்ணை அமைத்து உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செங்கமாரிஞானசேகரன்: தொடக்க வேளாண்கூட்டுறவு வங்கிகளில் புதிய விவசாயிகளுக்கும் கடன் வழங்க வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் இந்த மாத பெய்த மழையின் அளவு, பயிர் சாகுபடி விவரம், இடு பொருள் இருப்பு, உரங்கள் இருப்பு, பண்ணை பயிர் மேலாண்மைத்திட்டம் போன்ற விவரங்களை மாவட்ட ஆட்சியர் விவசாயிகளிடம் விளக்கிப் பேசினார். இதில், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ். மாரிமுத்து, முன்னோடி வங்கி மேலாளர் எஸ். ராமசாமி, வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் மற்றும் வேளாண்துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கமளித்தனர்.

## ரூ .6 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் அளிப்பு

தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்துறை சார்பில் ரூ. 6.17 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆட்சியர் செ. மனோகரன் பங்கேற்று, 2 பயனாளிகளுக்கு தலா ரூ. 84 ஆயிரம் மதிப்பில்(ரூ.30 ஆயிரம் மானியம்), 2 பயனாளிகளுக்கு தலா ரூ. 89,860 மதிப்பில் (ரூ. 30 ஆயிரம் மானியம்) மொத்தம் ரூ. 3.47 லட்சம் மதிப்புள்ள சுழற்கலப்பைகளையும், 3 பயனாளிகளுக்கு தலா ரூ. 89,860 மதிப்பில் (ரூ.30 ஆயிரம் மானியம்) மொத்தம் ரூ. 2.69 லட்சம் மதிப்பிலான ரொட்டோவேட்டர் கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்கினார். இதன் மொத்த மதிப்பு ரூ. 6.17 லட்சமாகும்.

மேலும், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் விவசாயிகளின் விளை நிலங்களில் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தும் வகையில், அவற்றை பிடிப்பதற்காக 37 கூண்டுகளை, மாவட்ட வன அலுவலர் எஸ்.ஏ. ராஜுவிடம் ஆட்சியர் ஒப்படைத்தார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் மாரிமுத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர். சக்திவேல், வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கரூர் மாவட்டத்தில் 5 ஒன்றியங்களில் இன்று உழவர் பாதுகாப்புத் திட்ட முகாம்

கரூர் மாவட்டத்தில் 5 ஒன்றியங்களில் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் சனிக்கிழமை (செப். 21) நடைபெறுகிறது. இதுகுறித்து கரூர் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி  வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், கரூர் மாவட்டத்தில் கரூர், தோகைமலை, கிருஷ்ணராயபுரம், பரமத்தி, கடவூர் ஊராட்சி ஒன்றியங்களுக்குள்பட்ட பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் இந்த சிறப்பு முகாம்கள் சனிக்கிழமை நடைபெற உள்ளன. இத்திட்டத்தின் கீழ் உதவி கோரும் மனுக்கள் இந்த முகாமில் பெறப்பட உள்ளன. உழவர் அட்டை  வைத்துள்ள விவசாயிகள், அவர்களைச் சார்ந்தவர்கள்  திருமணம், கல்வி உதவித் தொகை, இயற்கை மற்றும் விபத்து மரண நிவாரணத் தொகை, புற்றுநோய், காசநோய், இருதய நோய், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாற்காலிக இயலாமை காலத்துக்கான ஓய்வூதியம் கோரி மனுக்களை அளிக்கலாம்.

மேலும், தகுதியுள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக இந்த முகாமில் விண்ணப்பிக்கலாம். தத்தம் வங்கிக் கணக்கு புத்தகத்தின் நகலுடன் விண்ணப்பத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் அளிக்கலாம்.

இதைத் தவிர, வட்டாட்சியர் அலுவலகங்களில் சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் அல்லது வட்டாட்சியரிடம் மனுக்களை அளித்து, அரசு வழங்கும் நலத் திட்டங்களைப் பெற்று பயன்பெறலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.09.2013**

**வனப்பகுதி அருகேயுள்ள விவசாயிகள் வனவிலங்குகள் நடமாட்டம் குறைவால் நிம்மதி**பழநி : கொடைக்கானல் மற்றும் பழநி வட்டாரத்தில் மழை பெய்து வருவதால், வனப்பகுதி நீர்நிலைகள், அணைகளுக்கு வரத்துள்ளது. யானைகள், காட்டுமாடுகள்,மான் போன்ற விலங்குகள் உணவு, தண்ணீருக்காக அடிவாரப்பகுதிகளுக்கு வருவது குறைந்துள்ளதால், விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

பழநி வட்டாரத்தில் போதிய மழையில்லாமல், யானைகள், காட்டுமாடுகள் மாலை, அதிகாலை நேரத்தில் அடிவாரப்பகுதிகளுக்கு வருவது அதிகரித்தது. இவைகள் தோட்டங்கள், விவசாயப்பயிர்களை சேதப்படுத்தியது. கிராம விவசாயிகள், மக்கள் அச்சத்தில் இருந்தனர். கடந்த சில நாட்களாக கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் பழநி வரதமாநதி, தேக்கந்தோட்டம் போன்ற பகுதிகளில் மழை பெய்துள்ளதால், வனப் பகுதியில் செடிகள்,மரங்கள் பசுமையாகியுள்ளது. அணைகள், நீர்நிலைக்குட்டைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் யானைகள், காட்டுமாடுகள், மான்கள் அடிவாரப்பகுதிகளுக்கு வருவது குறைந்துள்ளது.நிம்மதி: மழையால் வனவிலங்குகள் நடமாட்டம் குறைந்துள்ளதால், மக்காச்சோளம், கரும்பு, வாழை போன்ற பயிறு வகைகளை பயிரிட்டுள்ள விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர். ரேஞ்சர் கணேசன் கூறுகையில்," மழைபெய்துள்ளதால், யானைகள், காட்டுமாடுகளுக்கு தேவையான உணவு,தண்ணீர் வனப்பகுதியில் கிடைக்கிறது. அடிவாரப்பகுதிகளில் வனவிலங்குகளின் நடமாட்டம் குறைந்துள்ளது," என்றார்.

**விவசாய பயிர் கடன் புதுப்பிக்க வாய்ப்பு**

உத்தமபாளையம் : உத்தமபாளையம், கம்பம் ஸ்டேட் வங்கி கிளைகளின் சார்பில் வாடிக்கையாளர்கள், விவசாயிகளுக்கான பயிர்க்கடன் புதுப்பித்தல் முகாம்,க.புதுப்பட்டியில் நடந்தது. ஸ்டேட் வங்கியின் சென்னை ஊரக வர்த்தக குழுமத்தின் பொது மேலாளர் ஆழ்வார் கண்ணன் தலைமை வகித்தார். ஊரக வர்த்த குழுமத்தின் தலைமை மேலாளர் வீரநாராயணன் முன்னிலை வகித்தார். உத்தமபாளையம் கிளை மேலாளர் நடராஜன் வரவேற்றார்.

முகாமில் உத்தமபாளையம், கம்பம், அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட ஊர்களிலிருந்து, ஏராளமான வாடிக்கையாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். 90 வாடிக்கையாளர்கள் தாங்கள் பெற்றிருந்த பயிர்கடன்களை புதுப்பித்துக் கொண்டனர்.

இம்மாதம் இறுதிவரை, இந்த புதுப்பித்தல் முகாம் நடக்கிறது. தவணையை நிலுவையின்றி முறையாக கட்டியவர்களுக்கு மீண்டும் கூடுதலாக ரூ. 3 லட்சம் வரை குறைந்த வட்டியில் கடனுதவியும், வராக்கடனை செலுத்தியவர்களுக்கு, வட்டியில் அதிக சதவீதம் குறைத்தும் புதுப்பிக்கப்படும், என அறிவிக்கப்பட்டது. கிளை மேலாளர் சேகர் நன்றி கூறினார்.

**தென்னையில் நத்தை புழு தாக்குதல்:வேளாண் துறை அறிவுரை**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னையில் நத்தை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் உழவியல் மற்றும் வேதியியல் முறைகளை கையாண்டு அவற்றை அழிக்க வேண்டும்' என, வேளாண் துறை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அ றிக்கை:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குறிப்பாக போச்சம்பள்ளி அடுத்த பெண்டரஅள்ளி, புலியூர், மஞ்சமேடு, துரைப்பட்டி, பாப்பானூர், மேட்டுக்கடை, ஆட்டுகாரனூர்

ஆகிய சுற்றுவட்டார கிராமங்களில் உள்ள தென்னை மரங்களில் நத்தை புழுக்கள் எனப்படும் எரிபூச்சி தாக்குதல் தற்போது அதிகரித்து காணப்படுகிறது.

தமிழகத்தில் முதன், முறையாக இந்த பகுதியில் நத்தை புழுக்களின் தாக்குதல் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. நத்தை புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம், வெள்ளை கோடுகளுடன் நான்கு வரிசை ரோமங்களுடன் காணப்படும்.

இது மனித உடலில் பட்டால் அரிக்கும் தன்மை கொண்டது. இந்த புழுக்கள் தென்னை ஓலைகளை சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகப்பெரிய சேதத்தை உருவாக்கி தென்னை மரத்தை காயவைக்கும்.

இதனால், பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி விளைச்சல் முழுவதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த புழுக்களை விவசாயிகள் விளக்கு பொறி, உழவியல் முறை மற்றும் வேதியியல் முறையில் அழிக்கலாம்.

விளக்கு பொறிகளை வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த இரவு, 7 மணி முதல், 11 மணி வரை தென்னந்தோப்புகளில் ஏக்கருக்கு மூன்றிலிருந்து ஐந்து பொறிகள் வைத்து அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இதனால் இனப்பெருக்கம் குறைந்து விடும்.

உழவியல் முறையில் நிலங்களை சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். காய்ந்த ஓலைகள், மட்டைகளை அப்புறப்படுத்த வேண்டும். நிலங்களை உழவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வேதியியல் முறையில் ஒரு லிட்டர் தண்ணீரில் மோனோகுரோட்டோபாஸ் இரண்டு மில்லி கலந்து அத்துடன் பூஞ்சான கொல்லி மருந்து காப்பர் ஆக்ஸி குளோரைடு, 2.5 கிராம் கரைத்து ஒட்டும் திரவத்துடன் தெளிப்பான் கொண்டு தென்னை ஓலைகளில் தெளிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் உடனடியாக இந்த முறைகளை கையாண்டு நத்தை புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். இந்த மருந்துகள் தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில் விற்பனைக்கு தயார் நிலையில்

வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் மற்றும் களப்பணியாளர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**முட்டைக்கோஸ் சீஸன் துவக்கம் மார்க்கெட்டில் விற்பனை கனஜோர்**

ஈரோடு: முட்டைக்கோஸ் சீஸன் துவங்கியதால், ஈரோடு மார்க்கெட்டில் விற்பனை களை கட்டியுள்ளது.

புரட்டாசி மாதத்தில் இருந்து சீஸன் துவங்கி உள்ளதால், ஈரோடு மார்க்கெட்டுக்கு நூற்றுக்கணக்கான மூட்டைகளில் வந்து குவிந்துள்ளன. தமிழகத்தில் ஓசூர், தாளவாடி மலைப்பகுதிகளிலும், கர்நாடக மாநிலத்தில் மைசூர் மற்றும் சாம்ராஜ் நகர் பகுதிகளிலும் கோஸ் அதிகளவில் விளைகிறது.

கோஸ்களில் சாண்டஸ், பட்டகோஸ் உள்பட மொத்தம், மூன்று ரகங்கள் உள்ளன. சாண்டஸ் ரகம் கிலோ, 18 முதல், 20 ரூபாய் வரையும், பட்ட கோஸ், 15 முதல், 16 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இம்மாதத்தில் இருந்து, சீஸன் துவங்கி உள்ளதால், விலை சற்று அதிகமாக உள்ளது. ஒரு மாதத்துக்கு முன்பு, கடும் கிராக்கி நிலவியதால், கிலோ, 40 முதல், 60 ரூபாய் வரை அதிகரித்து காணப்பட்டது.

இருப்பினும் ஹோட்டல்கள் மற்றும் ஃபாஸ்ட் ஃபுட் கடைகளில், இவற்றை அதிகமாக வாங்கினர். புரட்டாசியில் சீஸன் துவங்கி உள்ளதால், தற்போது கர்நாடகம் மற்றும் தமிழகத்தில் ஓசூர், தாளவாடி, மைசூர் உள்ளிட்ட கோஸ் விளையும் பகுதிகளில், நல்ல மழை பெய்து வருகிறது.

தற்போது கிலோ, 18 முதல், 20 ரூபாய் வரை உள்ள நிலையில், 10 ரூபாய் வரை விலை குறையக்கூடும். ஒரு மூட்டையில், 60 முதல், 70 கிலோ காய்கள் இருக்கும். ஈரோடு மார்க்கெட்டில் நாளொன்றுக்கு, 250 முதல், 300 மூட்டைகள் வரை விற்பனையாகின்றன, என்று மொத்த வியாபாரி காஜா தெரிவித்தார்.

**பசுந்தேயிலை மகசூல் அதிகரிப்பால் சிக்கல்**

மஞ்சூர்:தேயிலை பறிக்க ஆட்கள் பற்றாக்குறையால் குறிப்பிட்ட நாளில் தேயிலை செடிகளில் பசுந்தேயிலை பறிக்க முடியாமல் போனதால் வீணாகி வருகிறது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளாக தேயிலைக்கு போதுமான விலை கிடைக்காததால், தோட்ட உரிமையாளர்கள் தோட்டங்களை பராமரிக்க முடியாமலும், தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாமல் போனதால், தேயிலை தொழிலை விட்டு, பல தொழிலாளர்கள் வேலை வாய்ப்புகளை தேடி வெளியிடங்களுக்கு சென்றனர்.கடந்த ஓர் ஆண்டாக, கிலோவுக்கு 15, 17 ரூபாய் வரை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிலும், தனியார் தொழிற்சாலைகளில் கிலோவுக்கு 20, 22 ரூபாய் வரை விலை கிடைத்து வருவதால் தேயிலை விவசாயிகளுக்கு ஓரளவுக்கு வருவாய் கிடைத்து வருகிறது.ஆட்கள் பற்றாக்குறைஆனால், தேயிலை தோட்ட வேலைக்கும், இலை பறிப்பதற்கும் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தேயிலை தோட்ட உரிமையாளர்கள் ஆட்களை தேடி பிடிக்க சென்றாலும் ஆட்கள் கிடைப்பதில்லை.வேறுவழியின்றி சில இடங்களில் ஒரு கிலோவுக்கு 4 ரூபாய் வரை பணம் கொடுத்து ஆட்களை வேலைக்கு அழைத்து வருகின்றனர். மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான எடக்காடு, தங்காடு ஓரநள்ளி, மீக்கேரி, காத்தாடிமட்டம், நுந்தளா, பாலகொலா உள்ளிட்ட பகுதிகளில் தேயிலை தோட்டங்களில் ஆட்கள் பற்றாக்குறையால் குறிப்பிட்ட நாளில் பசுந்தேயிலை பறிக்க முடியாமல் போனதால், இலை மகசூல் அதிகரித்து, பல ஆயிரம் கிலோ பசுந்தேயிலை தோட்டங்களில் வீணாகி வருகிறது.தற்போது, பரவலாக பெய்து வரும் மழையால்பசுந்தேயிலை வரத்து ஒரு புறம் அதிகரித்து வருவதும், மறுபுறம் ஆட்கள் பற்றாக்குறையால் தேயிலை தோட்ட உரிமையாளர்கள் திணறி வரும் சூழலும் தொடர்கிறது. எனவே, இந்த பிரச்னைக்கு தீர்வு காண தேயிலை வாரியும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மலிவு விலை காய்கறி கடைகள் இயங்குவதில் சிக்கல்**

மலிவு விலை காய்கறி கடைகளில், தினமும் நஷ்டம் ஏற்படுவ தால், அவற்றை தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டு வருகிறது. இதை தவிர்க்க, முதல்வர் ஜெயலலிதா உதவ வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.சென்னையில் தற்போது செயல்பட்டு வரும், 31 மலிவு விலை காய்கறி கடைகள் துவங்கப்பட்டது முதல், கடந்த, 19ம் தேதி வரை, 1,550 டன் காய்கறிகள் விற்பனையாகி உள்ளன. அதன் மதிப்பு, 4.50 கோடி ரூபாய்.அந்த கடைகளுக்கு, திரும்ப செலுத்தும் முறையில், வட்டி இல்லாமல், 2.30 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தற்போது, நிதி முழுவதும் தீர்ந்து விட்ட நிலையில், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி அமைச்சகம் மறுப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.இதனால், மலிவு விலைகாய்கறிகள் கடைகளை தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எனவே, முதல்வர் ஜெயலலிதா தலையிட்டு, கடைகளை தொடர்ந்து நடத்துவதற்கும், கூடுதல் கடைகள் திறப்பதற்கும், அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:சந்தை விலைக்கு வாங்கி, குறைந்த விலையில் விற்கப்படுவதால், தினமும் நஷ்டம் ஏற்படுகிறது. நிதி உதவிக்காக, தலைமை செயலர் மற்றும் நிதி அமைச்சகத்திடம், பல முறை கோரிக்கை விடுத்தும், நிதி கிடைக்கவில்லை.வெளிச்சந்தை விலை உயர்வை கட்டுப்பட்டுத்த துவங்கப்பட்ட, விலைக்கட்டுப்பாட்டு நிதியத்தின் தொகையை, முதல்வர் ஜெயலலிதா, 50 கோடியிலிருந்து, 100 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளார். அந்த நிதியத்தில் இருந்தும், நிதி உதவி கேட்கப்பட்டுள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.மானியம் வழங்கப்படுமா?ரேஷனில் அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள் உள்ளிட்ட உணவு பொருட்களை குறைந்த விலையில் விற்க, நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு, நடப்பாண்டில், 4,900 கோடி ரூபாய் மானியம்

வழங்கப்பட்டுள்ளது.அதேபோல், மலிவு விலைகாய்கறி கடைகளுக்கும் மானியம் வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**விவசாயிகளுக்கு அதிகளவில் வங்கி கடன்**

விழுப்புரம்:விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடந்தது.கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். வேளாண் இணை இயக்குனர் சக்கரவர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராஜேந்திரன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜூ, மின் வாரிய மேற்பார்வை பொறியாளர்கள் அசோகன், சிவராஜ், வேளாண் அலுவலர் கதிரேசன் முன்னிலை வகித்தனர்.கலெக்டர் சம்பத் பேசியதாவது:தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த முதல்வர் ஜெ., வழிகாட்டுதலின்படி, மாவட்டத்தில் மூன்றாண்டுகள் ஒருங்கிணைந்த பண் ணையத் திட்டம், தன்னிறைவுத் திட்டமாக செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 1,500 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விவசாயிகள் தேர்வு பணி நடக்கிறது.ஓலக்கூர் மற்றும் ஆலங்குப்பம் கிராமங்களில் புறநகர் காய்கறி சேமிப்பு மையங்கள் துவங்கப்பட்டு, விவசாயிகள்- வியாபாரிகள் நேரடியாக காய்கறிகளை விலை நிர்ணயிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்கின்ற விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும்.மாவட்டம் முழுவதும் உள்ள நீர் வரத்து வாய்க்கால் மற்றும் அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான கூடுதல் நெல் விதைகள், உரங்கள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளது. விவசாயிகளுக்கு அதிகளவில் பயிர்க்கடன், பால் உற்பத்திக்கு கடன் வழங்கவும், வனவிலங்குகளால் விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், கூட்டுறவு மற்றும் வனத்துறை மூலம் விவசாயிகளுக்கு குறை கேட்பு கூட்டம்

நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் முத்துமல்லா ரெட்டியார், கன்னலம் ரவிநயினார், எண்ணாயிரம் செல் வராஜ், சுப்ர மணியன் உள் ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.

## நெல்லுக்கு அரசு விலை அறிவிக்குமா விவசாயிகள் எதிர்பார்ப்பு

கடலூர்:குறுவை அறுவடை முடிந்து, சம்பா சாகுபடி துவங்கியுள்ள நிலையில் நெல்லுக்கான ஆதார விலையை தமிழக அரசு அறிவிக்காமல் உள்ளது விவசாயிகளை அதிருப்தி அடையச் செய்துள்ளது.பொது வினியோகத் திட்டத்திற்காக மத்திய அரசு, விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல்லை மாநில அரசு மூலமாக கொள்முதல் செய்து வருகிறது. இதற் காக மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத் தில் நெல் விலையை அறிவிக்கும். அதனைத் தொடர்ந்து மாநில அரசு ஆதார விலையை அறிவிக்கும்.இதன்படி தமிழகத்தில், மத்திய அரசுக்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், விவசாயிகளிடம் இருந்து நெல்லை நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது. இதற்காக குறுவைப் பட்டத்திற்கு ஆகஸ்ட் மாதமும், சம்பா பட்டத்திற்கு டிசம்பர் மாதம் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப அந்தந்த பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.இவ்வாறு 2013-14ம் ஆண்டு நெல்லுக்கான விலையை மத்திய அரசு கடந்த ஜூன் மாதம் அறிவித்தது. அதில் முதல் ரகம் குவிண்டால் 1,350 ரூபாய், இரண்டாம் ரகம் 1,300 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இது கடந்தாண்டை விட குவிண்டாலுக்கு 70 ரூபாய் கூடுதலாகும். இந்த விலையோடு, ஆதார விலையை தமிழக அரசு அறிவித்திருக்க வேண்டும். ஆனால், மாநிலத்தில் குறுவை சாகுபடி முடிந்த நிலையிலும், இன்னமும் நெல்லுக்கான ஆதார விலையை அறிவிக்கவில்லை.மாநிலத்தில் கடந்தாண்டு நிலவிய வறட்சி காரணமாக குறுவை சாகுபடி பெருமளவு குறைந்தது. இதன் காரணமாக, நெல் விலை வெளி மார்க்கெட்டில் உயர்ந்தது. உதாரணத்திற்கு, பொன்னி மற்றும் பி.பி.டி., ரக நெல்

குவிண்டால் 1,400 ரூபாயிலிருந்து 1,700 ரூபாய் வரை விலை போகிறது. அரசு நிர்ணய விலையை விட, வெளிச்சந்தையில் கூடுதலாக விலை கிடைத்ததால் விவசாயிகள், நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கக் கோரவில்லை. மாநிலத்தில், குறுவை சாகுபடி அறுவடையும் முடிந்து, தற்போது சம்பா சாகுபடிக்கான பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.ஆனால் தமிழக அரசு இன்னமும் , நெல்லுக்கான ஆதார விலையை அறிவிக்காமல் இருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது, விவசாய தொழிலாளர்களுக்கான கூலி, உரம் உள்ளிட்ட இடுபொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, நெல்லுக்கான ஆதார விலையை விரைவில் அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.09.2013**

## திருந்திய நெல்சாகுபடி பயிற்சி முகாம்

திருவள்ளூர், : விவசாய கூலி தொழிலாளிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி திறன் குறித்த பயிற்சி முகாம் திருவள்ளூர் அடுத்த அரண்வாயல் ஊராட்சியில் நேற்று நடந்தது.

இதில் வேளாண்மை உதவி இயக்குநர் எபிநேசன் தலைமை தாங்கினார் . வேளாண்மை உதவி அலுவலர்கள் விவசாயிகளின் வயல்களில் நடவுமுறை குறித்து செயல்முறை விளக்கத்தை செய்து காட்டினர்.

விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான்கள், மார்க்கர் ஆகிய கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டதுபயிற்சியில் ஒன்றிய கவுன்சிலர் சுப்பிரமணி ., ஊராட்சி தலைவி காவேரி அன்பு ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கினர்முடிவில் ., வேளாண்மை உதவி அலுவலர் ராஜேஷ் நன்றி கூறினார்.

## புவனகிரியில் நடந்தது விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட மாநாடு

புவனகிரிகடலூர் மாவட்ட விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட மாநாடு : மாவட்ட தலைவர் .புவனகிரியில் நடந்ததுரவீந்திரன் தலைமை தாங்கினார் . பொருளாளர் சதானந்தம் .துணைத் தலைவர் துரைராஜ் கொடியேற்றி வைத்தார் மாநில குழு உறுப்பினர் சுப்பிரமணியன் அஞ்சலி தீர்மானங்களை .வரவேற்றார் அகில இந்திய துணைத்தலைவர் திருநாவுக்கரசு மாநாட்டை துவக்கி .வாசித்தார் :வைத்து பேசுகையில்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வேலையின் அளவை 24 கன அடியாகவும், வேலையின் நேரத்தை 6 மணி நேரமாகவும் அரசு தீர்மானிக்க வேண்டும் .விவசாய தொழிலாளர்களுக்கு உள்ள சட்ட கூலியை ரூ .300 ஆக

உயர்த்த வேண்டும் என்றார்.

மாவட்ட செயலாளர் தண்டபாணி வேலை அறிக்கை சமர்ப்பித்தார்மாவட்ட .

துணைத்தலைவர் கலியபெருமாள், மாவட்ட குழு உறுப்பினர் நாகராஜ் ஆகியோர்

தீர்மானங்களை முன் மொழிந்தனர்தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் பால .

கிருஷ்ணன் எம்எல்ஏ, மாவட்ட தலைவர் மாதவன், மாவட்ட செயலாளர்

ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

இதில் விவசாய தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தை முறையாக அமல் படுத்த வேண்டும்விண்ணப்பித்த அனைவருக்கும் வீட்டு மனைப் பட்டா . வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில பொதுச் .நிறைவேற்றப்பட்டது ணிசெயலாளர் ம நிறைவுரையாற்றினார்புவனகிரி ஒன்றிய செயலாளர் காளி .

.கோவிந்த ராசு நன்றி கூறினார்

மாநாட்டில் புதிய மாவட்ட தலைவராக சேதுராஜன், செயலாளராக தண்டபாணி,

பொருளாளராக செல்லையா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் .3

துணைத்தலைவர்கள், 3 துணை செயலாளர்கள் அடங்கிய 28 பேர் கொண்ட

மாவட்ட குழு நிர்வாகிகளும் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

**நெல் விதைப்பில் களைகள் களைக்கொல்லி தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்**

சிதம்பரம்குமராட்சி வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார் :

:வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

குமராட்சி வட்டாரத்தில் இந்தாண்டு நேரடி நெல் விதைப்பு 7800 ஹெக்டேரில்

செய்யப்பட்டுள்ளதுசில கிராமங்களில் களைகள் முளைக்கும் முன் .,

களைக்கொல்லி தெளித்துகளை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுபல கிராமங்களில் .

நேரடி நெல் விதைப்பு செய்த நிலையில், தொடர் மழையால் களைக்கொல்லி

தெளிக்க முடியாத நிலை இருந்தது.

அதனால் தற்போது நேரடி நெல் விதைப்பு செய்த பகுதிகளில் களைகள் காணப்படுகிறதுவிவசாயிகள் களைக்கொல்லிகளை தெளித்து பயன்பெறுமாறு . களைச்செடிகள் .கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்24 இலைப்பருவம் இருக்கும்

போது பிஸ்பைரிபாக் சோடியம் 10 எம்சி, களைக்கொல்லியை 80 முதல் 100 மில்லி வரையும் அல்லது மெட்சல்ப்யூரான் மீத்தைல் உடன் குளோரிமீயூரான் ஈத்தலை சேர்த்து 8 கிராமை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

களைசெடிகள் 56 இலைபருவமாக இருந்தால் 24 டி சோடியம் உப்பு 80 சதவீதமும், நனையும் துகள் 500 கிராமும் 200 லிட்டர் தண்ணீர் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும்களைக்கொல்லியை பயன்படுத்தும் போது மண்ணில் போதிய .
.ஈரப்பதம் இருக்க வேண்டும்
களைக்கொல்லியை கைத்தெளிப்பான் கொண்டு பின்நோக்கி தெளித்து களையை கட்டுப்படுத்த வேண்டும்எனவே ., விவசாயிகள் மேற்கண்ட முறையில் களைக்கொல்லியை காலத்தே தெளித்து களைகளை கட்டுப்படுத்தி பயன்பெற வேண்டும், என கூறியுள்ளார்

**வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் மலர் சாகுபடி பயிற்சி முகாம்**

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் பகுதியில் மலர் சாகுபடி மிகப்பெரிய பரப்பளவில் செய்யப்படுகிறதுகுறிப்பாக மல்லிகை ., சம்பங்கி, செண்டு மல்லி உள்ளிட்ட மலர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது.

சத்தியமங்கலம் பகுதியில் நபார்டு வங்கி உதவியுடன் சுடர் தொண்டு நிறுவனம் மூலம் அமைக்கப்பட்ட உழவர்மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு நாள் மலர் சாகுபடி பயிற்சி பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் வழங்கப்பட்டது .
பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமினை நபார்டு வங்கி உதவிப்பொது மேலாளர் ஜிசந்தானம். தொடக்கி வைத்தார்கைமல்லி., சம்பங்கி, செண்டுமல்லி மலர்கள் சாகுபடி முறைகள் மற்றும் மலர்கள் மதிப்பு கூட்டுதல், விற்பனை வாய்ப்புகள் குறித்து பவானிசாகர் வேளாண் ஆராய்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியை ஹேமலதா பயிற்சி அளித்தார்.

மலர் சாகுபடியில் களை மற்றும் நீர் மேலாண்மை எனும் தலைப்பில் பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் துரை சாமி, மலர் சாகுபடியில் பூச்சி மேலாண்மை எனும் தலைப்பில் பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியர் சரவணன், மலர் சாகுபடியில் நோய் மேலாண்மை எனும் தலைப்பில் பவானிசாகர் வேளாண் ஆராய்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியர் மருதாசலம் தொழில் நுட்ப உரையினை வழங்கினர் .
தொடர்ந்து மலர் சாகுபடி குறித்த உழவர்களின் கேள்விகளுக்கு
நபார்டு வங்கி உதவியுடன் அளிக்கப்பட்ட.விளக்கமளித்தனர் இப்பயிற்சி முகாமில், ராஜன்நகர் (தென்றல் உழவர் மன்றம்), புதுபீர்கடவு செவ்வானம் ) (உழவர் மன்றம், பட்ரமங்கலம்மல்லிகை உழவர் மன்றம்), பசுவபாளையம் பசுமை ) (உழவர் மன்றம், பசுவபாளையம் காலனிபகுதி உழவர்கள் (மருதம் உழவர் மன்றம்)
முன்னதாக சுடர் தொண்டு நிறுவன இயக்குனர் .சுமார் நூறு பேர் பங்கேற்றனர்
நடராஜ் வரவேற்றார் பசுமை .உழவர் மன்ற செயலாளர் அப்புசாமி நன்றி கூறினார்.

**வேளாண் குறைதீர்க்கும் கூட்டம் ஈரோட்டில் 27ம் தேதி நடக்கிறது**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் வரும் 27ம் தேதி நடைபெறவுள்ளதுஅன்று . காலை11 மணி முதல் 11.30 மணி வரை மனுக்கள் கொடுக்கலாம் .11.30 மணி முதல் 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்னைகள் குறித்து கருத்து தெரிவிக்கலாம் பிற்பகல் .12.30 மணி முதல் 1.30 மணி வரை அலுவலர்களின் விளக்கங்களும் தெரிவிக்கப்படவுள்ளது .
இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொள்ள கலெக்டர் சண்முகம் கேட்டுக் .கொண்டுள்ளார்

### போச்சம்பள்ளி பகுதியில் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரிப்பு

போச்சம்பள்ளிபோச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை : பெய்ததால், அங்குள்ள ஏரிகள் நிரம்பி வருகின்றனஇதனால் விவசாயிகள் . கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த வாரம் பரவலாக .மகிழ்ச்சியடைந்துள்ளனர் மழை பெய்ததால், போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் பெரும்பாலான ஏரிகள் தண்ணீர் நிரம்பி காணப் படுகிறதுபோச்சம்பள்ளி ., கோணனூர், குன்னத்தூர், வாலிப்பட்டி, நடுப்பட்டு, மாடரள்ளி, மோட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகளில் நீர் மட்டம் அதிகரித்து வருகிறதுஇதனால் விவசாயிகள் மகிழ்ச்சி .
.அடைந்துள்ளனர்

கிருஷ்ணகிரி அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர், நெடுங்கல் அணையை அடைந்து பின்னர் பாரூர் ஏரிக்கு செல்கிறதுபின்னர் அங்கிருந் .து வெளியேறும் உபரி நீர் ஆமணக்கம்பட்டி கிராம எல்லையில் உள்ள வடிகால் வழியாக கோணனூர் ஏரிக்கு வந்துள்ளதுதற்போது அந்த ஏரியில் இருந்து உபரிநீர் திறந்து . விடப்பட்டதால் புளியம்பட்டி ஏரி, பெனுகொண்டாபுரம் ஏரிக்கு தண்ணீர் செல்கிறது.

மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்து போனதால், கிருஷ்ணகிரி அணையிலிருந்து குறைந்த அளவே தண்ணீர் திறந்து விடப்பட்டது . இது பாரூர் ஏரிக்கே போதுமானதாக இல்லை என்பதால், கோணனூர் ஏரிக்கு நீர் வரத்து முற்றிலும் நின்று போனதுஇதனால் கோணனூர் ஏரி வறண்டு . இந்நிலைய .பாலைவனம் போல் காட்சி அளித்தது ில், ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்ததாலும், கால்வாயில் தண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடுவதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### முட்டை விலை உயர்வு கறிக்கோழி விலை சரிவு

நாமக்கல்ஆனால் கறிக்கோழி .நாமக்கல்லில் முட்டை விலை உயர்ந்துள்ளது : .விலை சரிவடைந்துள்ளதுநாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றதுஇதில் பண்ணையாளர்கள் ., வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், 330 காசுகளாக இருந்த முட்டை விலையில் 5 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 335 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

மற்ற மண்டலங்களில் முட்டைவிலை விபரம்(காசுகளில்) :

சென்னை 333, பெங்களூரு 327, மைசூர் 327, ஐதராபாத் 308, மும்பை 340, விஜயவாடா 317, கொல்கத்தா 343, டெல்லி 321, பர்வாலா 309 காசுகள்.

ஒரு கிலோ முட்டைக்கோழி கி 52 ஆக நிர்ணயம் செய்யப்பட்டதுபல்லடத்தில் . கி53 ஆக இருந்த கறிக்கோழி விலையில் கி3 குறைக்கப்பட்டதுஇதன்படி நேற்று . ஒரு கிலோ கறிக்கோழி கி52 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டதுபுரட்டாசி . இதனால் விலை .மாதம் பிறந்துள்ளதால் கறிக்கோழி விற்பனை சரிந்துள்ளது ளர்கள்குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாதெரிவித்தனர்.

## வெங்காயம் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

நாமகிரிப்பேட்டைநாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை அடுத்த : இங்கு சுற்றுபகுதியை .மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது சேர்ந்த மூலப்பள்ளிப்பட்டி, நாமகிரிப்பேட்டை, கார்கூடல்பட்டி, கப்பலுத்து, மங்களபுரம், உரம்பு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வருகின்றனர்மெட்டாலா காய்கறி மண்டிகளில் நடக்கும் ஏலத்தின் . இந்நிலையதில் நேற்று முன்தினம் .மூலம் வியாபாரிகளுக்கு விற்கின்றனர் காய்கறி ஏல விற காமதேனு உழவர் மன்ற கூட்டமைப்பு சார்பில்ீபனை மையம் தொடங்கப்பட்டுள்ளது:அதில் நேற்றைய காய்கறி விலை விபரம் .

தக்காளி கிலோ ரூ .12 முதல் ரூ .16 வரை விற்பனையானதுவெண்டைக்காய் . .கிலோ ரூ14 வரையும் கத்தரிக்காய் கிலோ ரூ .11 முதல் ரூ .14 வரை விற்பனையானது. வெங்காயம் விலை நேற்று முன்தினத்தை விட கிலோவுக்கு ரூ . 3 வரை உயர்ந்து காணப்பட்டது .நேற்று முன்தினம் கிலோ ரூ .36 முதல் ரூ .39 வரை விற்பனையான வெங்காயம் நேற்று கிலோவுக்கு ரூ.3 அதிகரித்து ரூ .42க்கு விற்றது.இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் .

## விழுப்புரம் மாவட்டத்தில் 7 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் கால்

நடைகளுக்கு கோமாரி நோய் பரவுதலை தடுக்க கோமாரி தடுப்பூசி போடப்படுவதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென விழுப்புரம் ஆட்சியர் சம்பத் தெரிவித்துள்ளார் இது .குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய அளவிலான கோமாரி நோய் தடுப்பூசி பணி 6 லட்சத்து 63 ஆயிரம் கால்நடைகளுக்கு .போடப்பட உள்ளது (பசு மற்றும் எருமை ) இதற்காக 140 தடுப்பூசி பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகளிலும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டு தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது. கோமாரி நோய் தடுப்பூசி விழுப்புரம் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு குளிர்பதன அறையில் வைக்கப்பட்டு கால்நடை எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தடுப்பூசி போடப்படும் கோமாரி நோய் .தடுப்பூசி பணி 6 மாதங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்

படையில் இது 5வது கட்டமாக போடப்பட்டு வருகிறதுஎனவே விவசாயிகள் . அனைத்து கால்நடைகளுக்கும் தவறாமல் கோமாரி நோய் தடுப்பூசியினை .இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது .போட்டுக்கொள்ள வேண்டும்

## தேன்கனிக்கோட்டை உழவர் சந்தையில் காய்கறி விலை குறைந்தது

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டை உழவர் சந்தையில் காய்கறி விலை

வீழ்ச்சிஅடைந்துள்ளது.

தேன்கனிக்கோட்டை சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் காய்கறிகளை தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் உழவர் சந்தைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்தேன்கனிக்கோட்டை . உழவர் சந்தைக்கு தினம்தோறும்10 முதல் 11 டன் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறதுதினமும் ரூ .2 லட்சம் முதல் ரூ2.50 லட்சம் வரை வியாபாரம் நடைபெறுகிறது.

உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ14, வெண்டைக்காய் ரூ16, புடலங்காய் ரூ13, பீர்க்கங்காய் ரூ14, பந்தல் அவரை ரூ28, கொத்தவரை ரூ14, சுரைக்காய் ரூ12, பாகற்காய் ரூ15, முள்ளங்கி ரூ10, வெங்காயம் ரூ50, சின்னவெங்காயம் ரூ50 முதல் 54, பீன்ஸ் ரூ15 முதல் 20 வரையும் விற்பனையானது.

தக்காளி கடந்த வாரத்தில் கிலோ ரூ17வரை விற்பனையானதுநேற்று விலை . குறைந்து கிலோ ரூ14 என விற்கப்பட்டதுபீன்ஸ் கடந்த வாரம் ரூ .25 முதல் ரூ30 வரை விற்பனையானதுநேற்று ரூ .15 முதல் 20 ஆக குறைந்ததுபச்சை மிளகாய் . கடந்த வாரம் ரூ30 முதல் 32 வரை விற்பனையானதுநேற்று ரூ .22 ஆக குறைந்தது . முட்டைகோஸ் கடந்த வாரம் மூட்டை1100 வரை விற்பனையானதுநேற்று ரூ .300 வரை குறைந்து மூட்டை ரூ800க்கு விற்பனையானது.

இது குறித்து தளி வட்டார வேளாண்மை விற்பனை துறை அதிகாரிகள் கூறுகையில், கடந்த வாரம் ஓணம் பண்டிகையை முன்னிட்டு காய்கறிகளின் விலை சிறிது உயர்ந்திருந்ததுதற்போது புரட்டாசி மாதத்தில் சுபமுகூர்த்தங்கள் ., விசேஷங்கள், பண்டிகைகள் இல்லாதால் காய்கறி விலை குறைந்து வருகிறது என தெரிவித்தனர்.

## தொடர் மழையால் எலுமிச்சை விற்பனை சரிவு ஊறுகாய் தயாரிப்பு அதிகரிப்பு ரூ10க்கு 4 பழம் விற்பனை

எலுமிச்சை பழம் பொறுத்தவரை ஜூஸ் கடை, ஊறுக்காய் கம்பெனியால் தான் அதிகம் செலவாகிறதுதற்போது குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவுவதால் . ஜூஸ் கடைக்கு குறைந்தளவேஎலுமிச்சை பழம் தேவைப்படுகிறது. எலுமிச்சை பழம் வரத்து அதிகரிப்பால் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளதுஅதனால் ஊறுகாய் . ள் அனுப்பப்படுவதால்கம்பெனிக்கு அதிகளவில் பழங்க, ஊறுகாய் தயாரிப்பு அதிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

சேலம், : தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் தொடர் மழையால்

எலுமிச்சை விற்பனை கடுமையாக சரிவடைந்துள்ளது இதனால் .4 எலுமிச்சை பழம் ரூ10க்கு விற்பனை செய்யப்படுகிறது.

எலுமிச்சை பழம் ஆந்திர மாநிலம் கடப்பா, விஜயவாடா உள்ளிட்ட பகுதிகளிலும், தமிழகத்தில் ஈரோடு, புதுக்கோட்டை, விருதுநகர், தலைவாசல், மேச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலும் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறதுஇந்த பகுதிகளில் . வாய்பேட்டை பால் அறுவடை செய்யப்படும் எலுமிச்சை பழங்கள் சேலம் செவ் மார்க்கெட், திருமணிமுத்தாறு ஓரம், கடைவீதி உள்ளிட்ட பகுதிகளுக்கு மூட்டை கணக்கில் கொண்டு வரப்படுகிறது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் போதிய மழை இல்லாததால் எலுமிச்சை மரங் கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விளைச்சல் குறைந்ததுஇதனால் கடந்த . அப்போது பெரிய .ச்சை பழத்தின் விலை உச்சத்தில் இருந்ததுகோடையில் எலுமி எலுமிச்சை பழம் ஒன்று ரூ6க்கு விற்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் தொடர் மழையால் ஆங்காங்கே குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நீடிக்கிறதுஇதனால் எலுமிச்சை பழத்தின் . இதுகுறித்து சேலம் கடைவீதி .சரிந்துள்ளது தேவை குறைந்ததால் விற்பனை :எலுமிச்சை பழ வியாபாரிகள் கூறியதாவது

சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி நூற்றுக்கணக்கான மூட்டை எலுமிச்சை வருகிறது . தற்போது .அவற்றை சைஸ் வாரியாக பிரித்து வியாபாரம் செய்து வருகிறோம் ம் கோயில் திருவிழா எதுவும் புரட்டாசி மாதத்தையொட்டி திருமண விழா மற்று .இல்லாததால் எலுமிச்சை பழத்தின் விற்பனை சரிந்துள்ளது

இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் மழையால் தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் இதமான சூழ்நிலை நிலவுகிறதுஇதனால் எலுமிச்சை . டையில்கடந்த கோ .பழத்தின் விற்பனை வெகுவாக குறைந்துள்ளது800 பழம் கொண்டு ஒரு மூட்டை ரூ2500 என விலைக்கு வாங்கப்பட்டதுதற்போது அதே . பழ மூட்டை ரூ1800 என வாங்கப்படுகிறதுமூட்டை விலை குறைந்ததால் ., தற்போது நல்ல நிலையில் உள்ள 4 எலுமிச்சை பழம் ரூ10 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு எலுமிச்சை பழ வியாபாரிகள் கூறினர்.

## மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரிப்பு காய்கறி விலை குறைகிறது

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த ஜமீன் ஊத்துக்குளி, கோட்டூர், அங்கலக்குறிச்சி, ஏநாகூர் உள்ளிட்ட பல இடங்களில்., விவசாயிகள் அதிகளவு காய்கறிகளை சாகுபடி செய்கின்றனர்.

கடந்த ஜூன் மாதம் பெய்த பருவமழையின் போது சுற்றுவட்டார கிராமங்களில் விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டனர் சுமார் .3 மாதங்களுக்கு முன்பு விவசாயிகள் காய்கறிக்காக சாகுபடி செய்தனர்.

அவைகள் நன்கு விளைந்து மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படுகின்றதுஇதில் . தக்காளி, பூசணி, பாகற்காய், பீர்க்கங்காய், அவரை, வெண்டை உள்ளிட்ட பல காய்கறிகள் அதிகளவு மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது . கடந்த சில நாட்களாக மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து அதிகமாக இருப்பதால், விலை குறைந்துள்ளது.

கடந்த மாதம், ஒருகிலோ ரூ.34க்கு விற்பனை செய்யப்பட்ட பீர்க்கங்காய் இப்பே £து ரூ.12க்கும், ரூ.42க்கு விற்பனையான கொத்தவரை இப்போது ரூ.24க்கும், வெள் ளை முள்ளங்கி ரூ.22க்கும், சுரைக்காய் ரூ.14க்கும், பீட்ரூட் ரூ.12க்கும், பாகற்காய் ரூ.12க்கு என குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது.

## தர்மபுரி மாவட்டத்தில் மழையால் பூசணி விளைச்சல் பாதிப்பு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் 200 ஏக்கருக்கு மேல் சாம்பார் பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளதுசெம்மாண்ட குப்பம் ., செங்கல்மேடு, எஸ்கொட்டாவூர்., நாயக்கன் கொட்டாய், கிருஷ்ணாபுரம், தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் உள்ளிட்ட பகுதிகளில் சாம்பார் பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளதுவறட்சி . காலத்தில் சொட்டு நீர் பாசனத்தில் சாம்பார் பூசணி சாகுபடி செய்யப்பட்டிருந்தால், மகசூல் அதிகம் கிடைத்தது.மக்களிடையே அமோக வரவேற்பும் கிடைத்தது . தர்மபுரி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் சாம்பார் பூசணி கேரளா, பெங்களூரு, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், வேலூர் உள்ளிட்ட இடங்களுக்கு

விற்பனைக்கு செல்கிறதுஅறுவடை செய்யப்படும் வயல்களில் ஒரு கிலோ ரூ .3 முதல் ரூ10 வரை விற்பனை செய்யப்படுகிறதுவியாபாரிகள் ரூ .15 முதல் ரூ20 வரை வெளிச் சந்தையில் விற்பனை செய்கின்றனர்.

இதுகுறித்து விவசாயி முத்து கூறுகையில்,''தர்மபுரி மாவட்டத்தில் விளையும் சாம்பார் பூசணிக்கு வெளி மாவட்டங்களில் நல்ல வரவேற்பு உள்ளதுபெங்களூர் ., கோவை, ஸ்டார் ஓட்டல்களில் தர்மபுரி சாம்பார் பூசணி அதிகம் இடம் பெற்றுள்ளன.

தற்போது, மாவட்டத்தில் பெய்த மழையில் சாம்பார் பூசணி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுசெம்மாண்டகுப்பம் ., செங்கல்மேடு பகுதிகளில் வயலில் தண்ணீர் தேங்கியதால், சாம்பார் பூசணி செடி அழுகியுள்ளதுமழைநீர் .
இதனால் அறுவடை .பட்டதால் சரியான விலையும் காய்க்கு கிடைக்கவில்லை
அது வயலில் பழுத்து அழுகிய .செய்யாமல் வயலிலேயே விட்டு விட்டனர்
எனவே அரசு விலை நிர்ணயம் செய்ய .நிலையில் உள்ளதுவேண்டும்,'' என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.09.2013**

## கோரைப்புல் கட்டு ரூ.1,200-க்கு விற்பனை விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : Sep 21 | 01:04 am



கரூர் ,

கோரைப்புல் கட்டு ரூ.1,200 -க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>கோரைப்புல்</u>

கரூர் மாவட்டத்தில் காவிரி படுகை பகுதியில் நெல்லுக்கு அடுத்த படியாக விவசாயிகள் கோரைப்புல் பயிர் செய் கின்றனர். குறிப்பாக கரூர் மாவட்டத்தில் வேலாயுதம் பாளையம், தவிட்டுபாளை யம், என்.புதூர், நடுப் பாளையம், நெரூர் வடபாகம், சோமூர், திருமக்கூடலூர், வாங்கல், கடமங்குறிச்சி ஆகிய பகுதிகளில் பயிர் செய்யப்படுகிறது. இந்த பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கோரைப் புல் பயிர் செய்யப்படுகிறது.

20 ஆண்டுகள் பயன் தரும்

ஒரு விவசாயி ஒரு முறை கோரை பயிர் செய்தால் அது 20 ஆண்டுகள் பயன் தரும். மேலும் கோரை 6 மாதத்திற்கு ஒரு முறை அறுவடை செய்யும் பணப்பயிர். நன்றாக கோரையில் மகசூல் பெற தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 7 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ப்பதுடன், உரம் போட்டு கோரைப்புல் பயிறில் களை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண் டும்.

தரம் பிரித்தல்

கோரைப்புல்லின் தரம் அதன் உயரத்தையும், பருமனையும் பொருத்து அமையும் கோரைப்புல் ஒரு கட்டு ரூ.1,100 முதல் ரூ. 1,200 வரை விற்பனை செய்யப் படு கிறது. கோரைப்புல் கூடுதலாக இருந் தால் ஒரு கட்டு ரூ.1,200 முதல் 1,300 வரை விற்பனை ஆகிறது.

கழிவுக்கோரை

கழிவுக்கோரை 6 முடி கொண்ட ஒரு கட்டு ரூ. 200-க்கு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப் படுகிறது. 36 இன்ச் மாறு கொண்ட 8 முடி கொண்ட ஒரு கட்டு ரூ. 450 முதல் ரூ. 500 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

வயலில் உள்ள கோரையை அறுத்து முடி மற்றும் கட்டாக கட்டித்தர கூலி ரூ. 400 வரை வழங்கப் படுகிறது. ஒரு முடி என்பது 3 ஆயிரம் முதல் சுமார் 4 ஆயிரம் வரை உள்ள கோரையை கொண்டது.

விலை ஏற்றம்

கோரைப்புல் எப்போதும் ஒரு கட்டு ரூ. 500 முதல் ரூ. 700 வரை தான் விற்பனையாகும். ஆனால் தற்போது வறட்சி காரணமாக குறைவான அளவில் மட்டுமே மகசூல் கிடைத்தமையால் ஒரு கட்டு தற்போது ரூ.1,200 வரை விற்பனையாகிறது. தற்போது கிடைக்கும் இந்த நல்ல விலை இன்னும் 40 நாட்கள் வரை கிடைக்கும். அதன் பின்னர் விலை குறைந்து விடும் என்று கூறப்படுகிறது. ஒரு ஏக்கரில் 80 கட்டு முதல் 100 கட்டு வரை மகசூல் கிடைக்கும்.

<u>பிற பகுதிகள்</u>

கரூர் மாவட்டத்தில் விளை யும் கோரை திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை, தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, சேலம் மாவட்டம் ஓமலூர் ஆகிய பகுதிகளுக்கு லாரி மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் கோரைப்புல் விவசாயம் செய்ய முக்கிய காரணம், நெல் பயிருக்கு கூலி வேலைக்கு ஆட்கள் சரிவர கிடைப்பது இல்லை. கோரை பயிர் செய்ய அதிக தொழில் நுட்ப அறிவு தேவை இல்லை.ஒரு காலத்தில் உள்ளூர் பகுதியில் மட்டும் பயன் படுத்தப்பட்ட கோரை பாய் இன்று உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக கோரைபாய் விரிப் பாக பயன் படுத்தப்படுகிறது.

கோரை பாய் தயாரிப்பில் முத்திரை பதித்துள்ள பத்தமடைக்கு கரூர் பகுதியில் இருந்து தான் கோரை ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**2004 முதல் 2013–ஆம் ஆண்டில் இதுவரை உணவுப்பொருள்கள் விலை 157 சதவீதம் அதிகரிப்பு காய்கறி விலை 350 சதவீதம் உயர்வு**



2004 முதல் 2013–ஆம் ஆண்டில் இதுவரை அனைத்து வகை உணவுப் பொருள்களின் விலையும் விஷம் போல் உயர்ந்துள்ளது. இது தொடர்பாக தற்போது வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் தலையை சுற்ற வைக்கின்றன. ஒட்டுமொத்த அளவில் உணவுப் பொருள்களின் விலை 157 சதவீதம் உயர்ந்துள்ளது. காய்கறி விலை மட்டும் 350 சதவீதம் அதிகரித்துள்ளது.

<u>வெங்காயம்</u>

கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் வெங்காயம் விலை மட்டும் 521 சதவீதம் உயர்ந்துள்ளது. மற்ற உணவுப் பொருள்களைப் போலன்றி வெங்காயம் விலை மட்டும் படிப்படியாக ஏறுவது இல்லை. சில சமயங்களில் வெங்காயம் விலை ஒரு சில வாரங்களுக்குள் இரண்டு அல்லது மூன்று மடங்கு உயர்ந்து விடுவது சகஜமாக இருந்து வந்திருக்கிறது. 2010–11–ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் இவ்வாறு விலை திடீரென எகிறியது. தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.70–80 என்ற அளவில் உள்ளது.

நம் நாட்டில் மிகப் பிரதானமாக பயன்படுத்தப்படும் காய்கறிகளில் உருளைக்கிழங்கு மிக முக்கியமானது. 2009–ஆம் ஆண்டின் இரண்டாவது பகுதியில் உருளைக்கிழங்கு விலை ஏறக்குறைய 100 சதவீதம் ஏறியது. அதன் பிறகு 2010 ஜனவரியில்தான் விலை இறங்கியது.

இந்தியர்களின் மற்றொரு அபிமான உணவுப் பொருள் கத்தரிக்காய். 2004–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது கத்தரிக்காய் விலை 311 சதவீதம் உயர்ந்துள்ளது. முட்டைக்கோஸ் விலை போட்டி போட்டிக் கொண்டு 714 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே போன்று பல்வேறு காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவிற்கு சென்றுள்ளது.

2006–ஆம் ஆண்டில் ஒரு புதிய அச்சுறுத்தல் தோன்றியது. பருப்புதான் இதற்கு காரணமாக இருந்தது. இந்திய மக்களுக்கு புரதச் சத்தை வழங்கும் ஒரே உணவுப் பொருள் இது. 2005 தொடக்கத்திலிருந்து 2010–ஆம் ஆண்டு முடிவதற்குள் பருப்பு வகைகளின் விலை ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்ந்தது. 2012–ஆம் ஆண்டில் மேலும் விலை உயர்ந்து, அந்த ஆண்டு செப்டம்பரில் வரலாறு காணாத அளவைத் தொட்டது. அதன் பிறகு பருப்பு விலை சற்றே இறங்கினாலும், 2004–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இப்போது 123 சதவீதம் அதிகமாகத்தான் உள்ளது.

இந்தியாவின் பிரதான உணவு தானியங்கள் அரிசி மற்றும் கோதுமை. கணக்கீட்டு காலத்தில் அரிசி விலை 137 சதவீதமும், கோதுமை விலை 117 சதவீதமும்

உயர்ந்துள்ளது. பழங்கள் விலை 95 சதவீதம் உயர்ந்துள்ளது. மா, வாழை, ஆரஞ்சு, பப்பாளி போன்ற பல முக்கிய பழங்களின் விளைச்சல் அதிகமாக இருந்து வரும் நிலையிலும் விலை அதிகரிப்பு என்பது ஒரு கட்டாய நடைமுறை போலவே இருந்து வந்துள்ளது.

உப்புக்கு நேர்ந்த கதி

உப்புக்கு நேர்ந்த கதி வியப்பாக உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் உப்பு விலை 85 சதவீதம் உயர்ந்துள்ளது. பால் விலை 119 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை விலை 124 சதவீதமும், மசாலா பொருள்களின் விலை 119 சதவீதமும் உயர்ந்துள்ளது. சர்க்கரை விலை 106 சதவீதம் உயர்ந்துள்ளது.

**கூடலூர், முல்லைப்பெரியாறு, வைகை அணைகளின் நீர்மட்டம் உயருகிறது**

பதிவு செய்த நாள் : Sep 21 | 01:37 am



கூடலூர்,

தொடர் நீர்வரத்து எதிரொலியாக முல்லைப் பெரியாறு, வைகை அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி,திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் பாசன மற்றும் குடிநீர் ஆதா ரமாக முல்லைப்பெரியாறு மற்றும் வைகை அணை அமைந் துள்ளன. முல்லைப் பெரியாறு அணைப்பகுதியில் இந்த ஆண்டு

தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்ததை அடுத்து அணை நீர்மட்டம் 135 அடி வரை உயர்ந்தது. பின்னர் மழை குறையத் தொடங்கியது. அதே நேரத்தில் அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக தண்ணீர் தொடர்ந்து திறக்கப்பட்டு வரு கிறது. இதன் காரணமாக முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் குறைய தொடங் கியது.

இந்நிலையில் கடந்த 12-ந் தேதி முதல் அணை நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மீண்டும் மழை பெய்து வருகிறது. இந்த தொடர் மழை காரணமாக முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதி கரித்து வருகிறது. இதனால் அணை நீர்மட்டம் 124 அடி யாக நேற்று உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 2,470 கன அடி யாக காணப்பட்ட நீர்வரத்து நேற்று வினாடிக்கு 2,734 கன அடியாக அதிகரித்து காணப் படுகிறது. அணைப்பகுதியில் நேற்று முன்தினம் 43.2 மில்லிமீட்டரும், தேக்கடியில் 19 மில்லிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது. அணையில் 3,420 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

<u>வைகை அணை</u>

இதனிடையே முல்லைப் பெரியாறு அணையில் திறக் கப்படும் தண்ணீர் தேனி மாவட்டத்தில் பாசன மற்றும் குடிநீர் தேவை போக மீதம் உள்ள தண்ணீர் வைகை அணையை வந்தடைகிறது. இதன் காரணமாக வைகை அணைக்கு நீர்வரத்து வினா டிக்கு 989 கன அடியாக உள்ளது. இதனால் 71 அடி உயரம் கொண்ட வைகை அணை யின் நீர் மட்டம் நேற்று காலையில் 59.68 அடி யாக உயர்ந்துள்ளது. வைகை அணையில் இருந்து மதுரை நகர குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. அணை யில் 3,542 மில்லியன் கனஅடிநீர் இருப்பு உள்ளது.

தேனி மாவட்டத்தில் உள்ள மற்றொரு பிரதான அணை யான 57 அடி உயர மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 39 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 80 கன அடி வீதம் நீர்வரத்து காணப்படுகிறது. அணையில் இருந்து வினா டிக்கு 8 கன அடிநீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 172.75 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது.

126 அடி உயர சோத்துப் பாறை அணையின் நீர்மட்டம் 104.96 அடியாக காணப் பட்டது. அணைக்கு வினா டிக்கு 3 கன அடி நீர்வரத்தும், அதே அளவு தண்ணீரும் திறந்து விடப்படுகிறது. அணையில் 67.30 மில்லியன் கன அடிநீர் இருப்பு உள்ளது. தேனி மாவட்டம், கூடலூரில் 1.8 மில்லிமீட்டரும், வைகை அணையில் 0.2 மில்லிமீட்டரும் நேற்று முன்தினம் மழை பதிவாகி உள்ளது. கம்பம், கூடலூர் பகுதியில் சாரல் மழை நேற்றும் பெய்தது குறிப்பிடத்தக்கது.